**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. –7–(LW7)–மகுடீஸ்வரன்**

**நாள்.31.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**3ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கில் இறந்து போன கருப்பையா எனது நண்பர் என்றால் சரிதான். கருப்பையா இறந்த விபரம் தெரிந்து நான் மாலத்தூர் ரோட்டில் போய் பார்த்தேன். இரவு 10.00 மணிக்கு போய் பார்த்தேன். இறந்த விபரம் யார் சொல்லி தெரிந்தது என்றால் என்னுடன் வேலை பார்ப்பவர் சொல்லி தெரிந்து கொண்டேன் . அவர் பெயர் தெரியாது. அந்த இடத்திற்கு நானும் பிரேம் குமாரும் போனோம். அங்கு என்ன நடந்தது என்றால் போலீஸ்காரர்கள் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள் . இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் எடுத்தார்கள். அதற்காக நானும், பிரேம் குமாரும் கையொப்பம் செய்தோம். நாங்கள் சென்ற இடத்தில் விளக்கு வெளிச்சம் இல்லை என்றால் இருட்டாக இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், இறந்து போன கருப்பையா எனது நண்பர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் போன இடத்தில் அன்றைய தினம் 2 காவலர்கள் மட்டும் இருந்தார்கள் என்றால் சரிதான். வேறு நபர்கள் யாரும் இல்லை,

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அச்சராசக்காபட்டிக்கு சென்றேனா என்றால் மாலப்பட்டிக்கு சென்றேன். நான் மாலப்பட்டிக்கு சென்ற போது போலீசார் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. என்னை போலீசார் இரவு 10.00 மணிக்கு மேல் விசாரித்தார்கள் தேதி தெரியாது. நான் மாலப்பட்டிக்கு போன போது போலீசார் அங்கு இருந்தார்கள். போலீசார் வரைந்த வரைபடத்தில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும், பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.31 18:35:53 +0530

Additional District Judge,

Dindigul.